*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
doi : https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p457-462** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# அலைகளின் காலம் புதினத்தில் தோள்சீலைப் போராட்டம்

"The Upper-Cloth Revolt in the Novel Alaigalin Kaalam"

**சு.ரீபா,**

பதிவு எண்: 2422306012001, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,

இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி-620 802.

(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627 012)

**S. Reeba*,**

*(Register No: 2422306012001), Research Scholar, Research Centre of Tamil, Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802. Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamilnadu, India 627 012.*
*E-mail id: reeba12051985@gmail.com, ORCID: https://orcid.org/0009-0005-4465-1352*

**முனைவர் சு.இளமாறன்,**

*உதவிப்பேராசிரியர் & ஆய்வு நெறியாளர், தமிழத்துறை மற்றும் ஆய்வு மையம்,*

*இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி-620 802.*

*(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி-627 012)*

**Dr.S. Elamaran*,**

*Assistant Professor & Research Supervisor, Department of Tamil & Research Centre,*
*Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802.*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli,Tamilnadu India- 627 012.*
*E-mail id: maranlpc@gmail.com ORCID: https://orcid.org/0000-0002-7559-5980*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email: reeba12051985@gmail.com

**Abstract:** During the 18th and 19th centuries in Nanjil Nadu (South Travancore), women from lower-caste communities were denied the right to wear upper garments, a caste-based restriction that deeply undermined their dignity and freedom. The arrival of Christian missionaries offered critical support, giving these women the confidence to challenge social norms and publicly wear upper garments like the kuppayam. As Christian converts adopted this practice, it inspired women from other Hindu communities to demand the same right. However, upper-caste groups fiercely resisted this shift through public humiliation, harassment, and violent assaults. This conflict escalated into the historic Thol Seelai Struggle (Upper Cloth Agitation), marking a pivotal movement in South Travancore's history for caste equality, women's rights, and social reform.
**Keywords:** *Caste-based atrocities, Upper Cloth Agitation, Eraniel, Mandaikadu, festivals, Mugilai Raja Pandian, The Age of Waves.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

பதினெட்டாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தென்திருவிதாங்கூர் என்றழைக்கப்படும் நாஞ்சில் நாட்டுப் பகுதிகளில் சாதிக் கொடுமைகள் எல்லை மீறியதாய் காணப்பட்டன. குறிப்பாக தாழ்ந்த சாதிகளாக கருதப்பட்ட நாடார், புலையர், ஈழவர், மீனவர் போன்ற சாதிப் பெண்களுக்கு மேலாடை அணிவதற்கு உரிமை மறுக்கப்பட்டது. இதனால் பல பெண்கள் வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடந்தனர். இவர்கள் வாழ்க்கைக்கு விடிவெள்ளியாய் வந்தவர்கள் கிறிஸ்தவ மதம் பரப்ப வந்த மிஷனரிகள். இவர்கள் கொடுத்த ஆக்கமும் ஊக்கமுமே பெண்கள் வீடுகளில் இருந்து வெளிவரவும் மேலாடை அணியவும் தைரியம் அளித்தது. கிறிஸ்தவர்களாக மதம் மாறிய பெண்கள் குப்பாயம் என்ற ஆடை அணிய அனுமதிக்கப்பட்டதால் மற்ற இந்து மதப்பெண்களும் மேலாடை அணிந்தனர். இதை பொறுக்காத மேல் சாதி ஆண்கள் பெண்களின் மேலாடைகளைக் கிழித்து எறிந்தனர். பெண்களை மானபங்கப்படுத்தினர். இதுவே தோள் சீலைப் போராட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது. இவ்வரலாற்று நிகழ்வை மையமாகக் கொண்டதே இவ்வாய்வாகும்.

**திறவுச்சொற்கள்**

சாதிக்கொடுமைகள், தோள்சீலைப் போராட்டம், இரணியல், மண்டைக்காட்டு, விழாக்கள், முகிலை இராச பாண்டியன், அலைகளின் காலம்.

**முன்னுரை**

தோள் சீலைப் போராட்டம் என்பது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் நீண்ட போராட்ட வரலாறு. இதனை மையமாகக் கொண்டு பல நூல்கள் படைக்கப்பட்டிருந்தாலும் முகிலை இராச பாண்டியன் எழுதிய 'அலைகளின் காலம்' என்ற புதினம் இந்நிகழ்வுகளை நம் கண்முன்னே காட்சிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இதன் கதைக்களம் முழுக்க முழுக்க பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் நடைபெற்ற அடிமைகள் ஒழிப்பு, கிறிஸ்தவ மதமாற்றம், மேலாடை தொடர்பாக எழுந்த போராட்டங்கள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டது. எனவே இப்புதினம் சிறந்த வரலாற்று நாவலாகக் கருதப்படுகிறது. இந்நாவலில் தோள்சீலைக்காக நடந்த போராட்டங்கள் பற்றிய செய்திகளை இக்கட்டுரை பேசுகிறது.

**தோள்சீலைப் போராட்டம்**

"ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்பது பழமொழி. விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்திக்காட்டுவதே அவனது பகுத்தறிவுதான். பகுத்தறிவு பெற்ற மனிதன் நாகரிக வளர்ச்சி பெற்றான். அந்த நாகரிகத்தின் வெளிப்பாடே அவனது ஆடை அலங்காரம்.ஆனால் சாதியக்கட்டுப்பாடுகள் எப்போது தோற்றம் பெற்றனவோ, அதன் பெயரில் மக்கள் நசுக்கப்பட்டனர். அவர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டதோடு, அடிமைகளாக நடத்தப்பட்டனர். கடுமையான வரிச்சுமைகள் மட்டுமல்லாமல் ஆடைகள் அணிவதிலும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. "உயிரோடு வாழும் அளவுக்குரிய காசை சம்பாதிப்பதற்கே போராட வேண்டியிருந்த அம்மக்களால் அவர்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்க இயலாத நிலையே நீடித்து வந்தது. அதோடு மட்டுமின்றி அவர்கள் எப்போதும் எழுந்திருக்கவே கூடாது என்பதற்காய் வகை வகையாய் அவர்கள் மேல் வரிகள் மீண்டும் சுமத்தப்பட்டது. ஆணுக்குத் தலைக்கும் பெண்ணுக்கு முலைக்கும் வரி விதிக்கப்பட்டது." (கொல்லால் எச். ஜோஸ், ப- 46)

"ஒடுக்கப்பட்ட மக்கள் மீது 108 வகை வரிகள் சுமத்தப்பட்டு, வரி செலுத்தாத மக்கள் பெரிதும் துன்புறுத்தப்பட்டனர். 16 வயது முதல் 35 வயது வரையுள்ள பெண்கள் மார்பு வரி செலுத்த வேண்டும். வரி செலுத்தாதவர்களின் முதுகில் பெரிய கல்லை ஏற்றி வைத்தல், வெயிலில் நிற்க வைத்தல், காதில் பழுக்க காய்ச்சிய இரும்பு கம்பியை நுழைத்தல், பெண்களின் தலைமுடியில் உலக்கையச் சுற்றி தொங்க விடுதல் போன்ற துன்புறுத்தல்கள் பல நடைபெற்றது." (எமெரிட்டஸ் பேராசிரியர் Dr.R.ஐசக் ஜெயதாஸ், ப.23) இதனை தான்

**"சாதிப் பிரிவுகள் சொல்லி – அதில்**
**தாழ்வென்றும் மேலென் கொள்வார்**
**நீதிப் பிரிவுகள் செய்வார் – அங்கு**
**நித்தம் சண்டைகள் செய்வார்"** (பாரதியார் ,முரசு,பாடல் எண்:17)

எனப் பாரதியார் பாடியுள்ளார். இவ்வாறு பலவாறாகத் துன்புறுத்தப்பட்ட மக்களின் மனக்குமுறலின் வெளிப்பாடே தோள்சீலைப் போராட்டம். இப்போராட்டம் என்பது ஓரிரு நாட்களில் முடிந்து விடவில்லை. அரை நூற்றாண்டிற்கும் மேலாக இப்போராட்டம் நீடித்தது. இந்தப் போராட்டமே கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களால் தான் தோற்றம் பெற்றது எனலாம்.

இதற்கான முதல் விதையைத் தூவியவர் ரிங்கல் தௌபே ஆவார். இவர் தனது ஆலயத்திற்கு வரும் பெண்கள் மேலாடை அணியாமல் வருவதைக் கண்டு "இதென்ன அநியாயம், இப்பெண்கள் தங்கள் மார்பை மறைக்கக் கூடாதபடி என்ன தவறிழைத்து விட்டார்கள் பிறப்பால் எப்படி ஒருவர் ஆடை அணிந்து கொள்ளும் உரிமையை இழப்பர்" (கொல்லால் எச்.ஜோஸ், ப. 48) என மனம் வருந்தியதோடு அவர்களுக்கு ஆடைகள் கொடுத்து அணிந்து வரச் செய்தார். அதோடு அக்காலத்தில் திருவிதாங்கூரின் ரெசிடண்டாக இருந்த கர்னல் மன்றோ என்பவரிடம் கிறிஸ்தவப் பெண்கள் மேலாடை அணிய அனுமதி வழங்க வேண்டினார். அவரும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய பெண்கள் மட்டும் மேலாடை அணியலாம் என ஆணையிட்டார். இது மேல் சாதியினரிடையே தணியாத கோபத்தீயை வளர்த்தது. அவர்கள் கர்னல் மன்றோவிடம் மறுபுகார் அளித்தனர். இதன் விளைவாக 1813 -ஆம் ஆண்டு "கிறிஸ்தவ பெண்கள் சிரியன் கிறிஸ்தவ பெண்களைப் போன்றும் மாப்பிள்ளை இனப் பெண்களைப் போன்றும் மார்பினை மறைத்து உடை அணியலாம் ஆனால் நாயர் இன பெண்களைப் போல தோளில் துண்டு போடுவது தவிர்க்கப்படுகிறது." (கொல்லால் எச்.ஜோஸ், ப. 49) என மறுஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனாலும் மன நிம்மதி அடையாத உயர்சாதியினர் இச்சட்டத்திற்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருந்தனர். மேல்சாதியினரின் அத்துமீறல்களும் ஆங்கில அரசின் தொடர் புகார்களினாலும் திருவிதாங்கூர் மகாராணி 1814 -இல் கிறிஸ்தவர்களாக மதம்மாறிய பெண்கள் மட்டுமே மேலாடை அணிய அனுமதி உண்டு என்ற ஆணையைப் பிறப்பித்தார். ஆனால் அதுவும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.ரிங்கல் தௌபேயைத் தொடர்ந்து 1817-இல் திருவிதாங்கூர் வந்த சார்லஸ் மீட் மற்றும் அவரது துணைவியார் ஜோகன்னா செலஸ்டீனோ போன்றோர் ஊழியத்தோடு பெண்கள் மேலாடை உரிமைக்கும் குரல் கொடுத்தனர். ஜோகன்னா ஆலயத்திற்கு வரும் பெண்களுக்கு குப்பாயம் என்னும் ஆடையை வடிவமைத்தும் அதை தைக்கும் பயிற்சியும் வழங்கினார். இதனால் தாழ்ந்த குல மக்கள் உயர்சாதியினர் போல ஆடையணிந்து சென்றது பொறுக்காத உயர்சாதியினர்

பெண்களின் ஆடைகளைக் கிழித்தும் அவர்களுக்கு துணையாக வரும் ஆண்களையும் அடித்துக்கொன்றனர். இதற்கு எதிராக கீழ்ச்சாதியினர் வெகுண்டெழுந்தனர். இதுவே ஆங்காங்கே கலவரங்கள் ஏற்படக் காரணமாக அமைந்தன. இக்கலவரங்கள் மூன்று நிலைகளில் 1822 முதல் 1859 வரை நடைபெற்றன. கிட்டத்தட்ட 54 ஆண்டுகால போராட்டத்திற்குப் பிறகு பெண்களுக்கு விடிவு காலம் பிறந்தது.

**புதினத்தில் போராட்ட வரலாறு**

ஆசிரியர் முகிலை இராசபாண்டியன் தான் பிறந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் அடைந்த இன்னல்களை தன் 'அலைகளின் காலம்' நாவலில் தோலுரித்துக்காட்டியுள்ளார். முதல் முதலாக இம்மாவட்டத்து பெண்கள் தோள்சீலை அணிய உரிமை இல்லாத கதையை அவர் தந்தை வழியாக அறிந்து கொண்ட போது "நமது ஊரிலும் பெண்கள் மேலாடை போடவில்லையா? போடக்கூடாது என்ற தடை இருந்ததா? என்று என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை."(முகிலை இராசபாண்டியன், ப.10) என ஆசிரியர் தனது நாவலின் தன்னுரையில் ஆதங்கத்துடன் கூறியுள்ளார். இவ்வரலாற்றை மக்களிடம் சேர்க்க வேண்டும் என்ற ஆர்வமே அவரை இவ்வரலாற்று நாவலைப் படைக்கத் தூண்டியது.

**இரணியல் சந்தைக் கலவரம்**

தாழ்ந்த சாதிப்பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்ற மேல் வர்க்கத்தினருக்கெதிராக எழுந்த முதல் கலவரம் இரணியல் சந்தைக் கலவரம். நாவலில் மாசானம் என்ற பனைத்தொழிலாளியும் அவர் மனைவி பத்திரகாளியும் பனங்காட்டிலேயே குடிசைபோட்டு வாழ்ந்து வந்தனர். பனைத்தொழில் செய்யும் தனது கணவருக்கு உணவு கொண்டு போகும் பத்திரகாளி வழியில் மேல்சாதியினர் வந்தால் தோளில் போட்ட சீலையை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு தன்கைகளால் மார்பை மறைத்து குனிந்து வணங்குவாள். தங்கத்தில் தாலி கூட போடக்கூடாது என்பதால் யாருக்கும் தெரியாமல் நகைகளை அணிந்து கொண்டு தண்ணீரில் முகம் பார்த்து ஆனந்தப்படுவார்கள். திடீரென்று ஒருநாள் பனையிலிருந்து விழுந்து கணவர் தன் கண்முன்னே இறந்து போக வாழ்க்கை முழுவதும் தனிமையிலே வாழ்ந்து வருகிறார். வயதானாலும் கோழிகளை வளர்த்து அவற்றைக் கொண்டு இரணியல் சந்தையில் விற்று வாழ்ந்து வருகிறார்.

இந்தச் சூழ்நிலையில் அவரின் குடிசைக்கு பக்கத்தில் பாண்டிக்காட்டிலிருந்து பனைத்தொழிலுக்காக வந்து குடிசை போட்டு வாழ்ந்து வந்தவர்கள் முத்தையா மற்றும் பொன்னாயி ஆகியோர். இவர்கள் முதலில் சுடலைமாடன், இசக்கியம்மன் கோயில்களுக்கு சென்று கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு நாள் இருவரும் கிறிஸ்தவர்களாக மதம் மாறி ஜான் முத்தையா மரிய பொன்னாயி எனப் பெயர் மாற்றம் செய்ததோடு மட்டுமல்லாமல் சந்தைக்குப் போகும் பத்திரகாளி பாட்டியுடன் கருப்பட்டி விற்கச் சென்றார்கள். அப்படி செல்லும்போது அவர்களின் பாதிரியார் சொன்னது போன்று மரிய பொன்னாயி ஜாக்கெட்டும் சேலையும் அணிந்து சென்றாள். சந்தையில் எப்போதுமே இப்பெண்களைப் பார்ப்பதற்கென்றே உயர்சாதி ஆண்கள் நின்று கொண்டிருப்பார்கள். இவர்கள் பொருள்கள் வாங்கவோ விற்கவோ வருவதில்லை. அங்கு வரும் கீழ்ச்சாதிப் பெண்களை நோட்டமிடுவதும் அவர்களை துன்புறுத்துவதுமே அவர்கள் வேலையாகும்.

அத்தகைய கயவர்களின் கண்ணில் பட்டாள் மரிய பொன்னாயி. "பொறுக்கிகளில் ஒருவன் பொன்னாயி அருகில் வந்து, என்னழா சில்லு கருப்பட்டி என்ன விலை...? என்றான். ஏலே... கருப்பட்டி எங்கலே தெரியுது.... அதைத்தான் மூடி வைச்சிருக்காளே....! என்றான் இன்னொருவன்.

அட... மூடியிருக்கிறதைத் திறந்து வியாபாரத்தை முடிச்சிட வேண்டியதுதான் என்றபடி கையை நீட்டினான் ஒருவன். இன்னொருவன் அவளது ஜாக்கெட்டைப் பிடித்துக் கிழித்தான். கருப்பட்டி விக்கிற நாய்க்கு நாயர் போல ஜாக்கெட் கேக்குதாக்கும் என்றபடி புடவையைப் பிடித்து இழுத்தான் இன்னொருவன்." (முகிலை இராசபாண்டியன், ப. 24)

இதனை தடுக்க முயற்சி செய்த பத்திரகாளி பாட்டியும் கயவர்களால் கொல்லப்படுகிறார். அப்போது பின்னால் வந்து கொண்டிருந்த பொன்னாயின் கணவர் தான் மறைத்து வைத்திருந்த திரச்சி மீன் வாலால் அனைவரையும் தாக்கினார். பொன்னாயி தன் கருப்பட்டிப் பெட்டிக்குள் வைத்திருந்த வெட்டரிவாளால் தன்னை தாக்க முயன்றவர்களைத் தாக்கினாள். இத்தாக்குதலை சமாளிக்க முடியாத நாயர்கள் அங்கிருந்து சிதறி ஓடினர். ஆனால் இச்செய்தி காட்டுத்தீயாய் எங்கும் பரவியது. கோபம் கொண்ட நாயர்கள் தம் கண்ணில் படும் நாடாரினப் பெண்களை எல்லாம் மானபங்கப்படுத்தினர்.

தம் இனப்பெண்களின் மானத்தைக் காக்க கிறிஸ்தவ நாடார்களுடன் இந்து நாடார்களும் சேர்ந்து கொண்டனர். இதுவே மிகப்பெரிய கலவரமாக வெடித்தது. இக்கலவரத்தில் நாடார்கள் தங்கள் கண்ணில் படும் நாயர்களை எல்லாம் வெட்டிச்சாய்த்தனர். பின்னர் இக்கலவரம் தென்திருவிதாங்கூர் படைகளால் ஒடுக்கப்பட்டது. கலவரக்காரர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டாலும் முக்கிய குற்றவாளிகள் தப்பித்தனர். இவ்வழக்கின் தீர்ப்பும் மேல் சாதியினருக்கே சாதகமாக அமைந்தது.

**மண்டைக்காடு கலவரம்**

மண்டைக்காடு என்னும் ஊரில் மிஷன் பங்களாவில் தங்கியிருந்த சார்லஸ் மீட் என்ற பாதிரியார் சமயப் பணி செய்ததோடு தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் உழைத்தார். இவர் தேவாலயத்திற்கு வரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கினார். இதனால் ஆண்களும் பெண்களும் மேல் சாதியினர் போல் ஆடை அணிய ஆரம்பித்தனர். "கிறிஸ்தவ தேவாலயத்திற்கு வரும் பெண்கள் நாயர் பெண்களைப் போல ஜாக்கெட் அணிந்து அதன் மேல் முந்தானை போட்டுக்கொண்டு வந்தார்கள். ஆண்கள் கணுக்கால்வரை வேட்டி கட்டிக்கொண்டு வந்தார்கள். ஒரு சிலர் தோளில் துண்டும் போட்டுக் கொண்டு வந்தார்கள்." ( முகிலை இராசபாண்டியன், ப.27) அதோடு மீட் பாதிரியாரின் மனைவியான ஜோகன்னா மீட் அங்கு வரும் பெண்களுக்கு ஆடைகளில் லேஸ் போடுவதற்கும் பயிற்சி வழங்கினார். இதனால் தாழ்ந்த குலப் பெண்கள் நாயர் பெண்களைப் போல லேஸ் தைத்த ஜாக்கெட் அணிந்தனர். இதனை பார்த்த நாயர்களுக்கு கோபம் அதிகரித்தது. "திருவிதாங்கூர் ஆட்சி நம்மிடம் இருக்கிறது. நம்மிடம் நமது பண்ணைகளிலும் அடிமை வேலை செய்யும் இந்த தாழ்ந்த ஜாதி நாய்கள் இவ்வளவு உயர்ந்த ஆடை அணிந்து போகின்றார்களே! நம்மைக் கண்டால் பத்தடி தள்ளி, தலைகுனிந்து கொண்டு போன இவர்கள் தலைநிமிர்ந்து நடக்கின்றார்களே! குடை கூடக் கொண்டு போகக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்ட இந்த நாய்கள், ஒரு கையில் குடையும் இன்னொரு கையில் வேதாகமப் புத்தகத்தையும் தூக்கிக்கொண்டு செல்கிறார்களே!" (முகிலை இராசபாண்டியன், ப.28) இதற்கெல்லாம் காரணம் மீட் பாதிரியார் தான் எனவே அவரைக் கொலை செய்ய வேண்டும் என நினைத்து பாதிரியாரைக் கொல்ல திட்டமிடுகின்றனர். இதற்கு மூளையாகச் செயல்பட்டவர்கள் பாஸ்கரன் நாயர், மாடன் ஐயா, சிதம்பரம் ஆகியோர். இவர்களின் திட்டத்தை முன் கூட்டியே தெரிந்து கொண்ட மீட் பாதிரியார் மண்டைக்காட்டிலிருந்து எட்டு மைல்கள் தூரத்தில் இருக்கும் உதயகிரி கோட்டைக்கு ஆள் அனுப்பி கேப்டன் சிபால்டைச் சந்தித்து உதவி கோரினார். பாதிரியாருக்கு உதவியாக தாழ்ந்த குல மக்கள் ஆண்கள் பெண்கள் என அனைவரும் பாதிரியாரின் வீட்டுக்கு முன்னர் பாதுகாவலுக்கு நின்றனர். அதேபோல் நாயர்கள் ஆயுதங்களுடன் பாதிரியாரைக்கொல்ல தக்க சமயம்

பார்த்து காத்துக் கொண்டிருந்தனர். இதனால் அப்பகுதி கலவரபூமியாக மாறியது. நாயர் மற்றும் நாடர்களிடையே சிறு சிறு பூசல்கள் உருவாகின. அது எந்நேரமும் பெரிய கலவரமாக வெடிக்கும் அபாயம் ஏற்பட்டது.

உதயகிரி கோட்டையிலிருந்து கேப்டன் சிபால்டின் படைகள் வருவதைத் தெரிந்து கொண்ட நாயர்கள் சிதறி ஓடினர். இதில் ஒரு சிலர் மக்களிடம் சிக்கினர். ஒரு பெரிய கலவரமாக வெடிக்க இருந்த நிகழ்வு ஆங்கிலப் படைகளால் முறியடிக்கப்பட்டது. இதில் கைது செய்யப்பட்டவர்கள் மீது பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கிற்கு சாட்சி கூற வந்த தாழ்ந்த ஜாதி பெண்கள் நீதிமன்றத்திற்குள் செல்லும்போது கூட மேலாடை அணிவதற்கு அனுமதிக்கப்படவில்லை. நீதிமன்றத்திலும் பெண்களுக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்படவில்லை. "மேலாடை சம்பந்தமாக மேல் ஜாதிக்காரர்களோ நாடார்களோ ஏனைய ஜாதிக்காரர்களோ இனிமேல் எந்தக் கலவரத்திலும் இறங்கக்கூடாது. ஆனால் கிறிஸ்தவப் பெண்கள் மார்பை மறைக்க மட்டும் அணிந்து கொள்வதுதான் நியாயம். மேல்ஜாதிப் பெண்களைப் போல் ஜாக்கெட் அணிவது பிரச்சினையைத்தான் வளர்க்கும்" (முகிலை இராசபாண்டியன், ப.43) என்ற தீர்ப்பால் பெண்கள் மனமுடைந்தனர்.

இந்த வழக்கு விசாரணை இறுதியாக அப்போதைய மகாராணியான பார்வதி பாயிடம் சென்றது. அவர்கள் வழங்கிய தீர்ப்பு முக்கியப்பங்கு பெற்றது. இரணியல், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுகாக்களில் உள்ள ஊர்களில் வாழும் நாடார் குலப் பெண்கள் பழைய வழக்கங்களை மாற்றி மேலாடை அணிந்து வருகின்றனர். இதனால்தான் கலகங்கள் உருவாகின்றன. "சான்றோர் குலப்பெண்கள் மேலாடை அணிவதற்கு யாதொரு நியாயமும் இல்லை. எனவே இவர்கள் மேலாடை அணியும் வழக்கத்தை நிறுத்தும்படி கட்டளையிடப்படுகிறது. இது முதற்கொண்டு அவர்கள் மேலாடையான தோள்சீலையை அணியக்கூடாது. கிறிஸ்தவச் சமயத்தைச் சான்றோர் குலமக்கள் தழுவினால் சான்றோர் குலப்பெண்கள் தோள் சீலை அணிவதற்குப் பதிலாக, குப்பாயம் அணிந்து கொள்ளலாம்- என்று 998 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 7 ஆம் நாள் (23. 5 .1823) எல்லா இடங்களுக்கும் கட்டளை அனுப்பியுள்ளோம்." (முகிலை இராசபாண்டியன், ப.44,45) என்ற மகாராணியின் தீர்ப்பு தாழ்ந்த குலப்பெண்களிடம் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. 'பெண்ணுக்குப் பெண்ணே எதிரி'என்ற வாக்கியத்திற்கு இணங்க ஒரு பெண்ணாக இருந்தும் சகப்பெண்களின் மானத்தைக் காக்காமல் சாதி என்ற அகங்கார போர்வையில் இருந்து கொடிய ஆட்சி செய்யும் அரசியாக, தாழ்ந்த குலப்பெண்களுக்குத் தோன்றினார் மகாராணி. இதிலிருந்து உயர்சாதியில் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கொடூரமான சாதி வெறி பிடித்தவர்களாகவே இருந்திருக்கின்றார்கள் என்பதை அறிய முடிகிறது.

**மேலாடை அணிந்ததற்காக பறிக்கப்பட்ட உயிர்கள்**

நீலன் குட்டி மற்றும் அவரது மனைவி இசக்கி ஆகியோர் லூயிஸ் பாதிரியாரைச் சந்தித்து மதமாற்றம் பெற்றனர். இதனை அறிந்த அவர் முதலாளி மாடன் ஐயா கடுமையாக கோபம் கொண்டார். ஏனெனில் அவன் அவரிடம் பண்ணை வேலைகள் செய்பவன்.நம்மிடம் அடிமை வேலை செய்பவன் மதம் மாறிவிட்டானே! இனி நம் முன் உயர் சாதி போன்று ஆடையணிந்து வருவானே என்ற ஆணவத்தால் அவர்களைக் கொல்ல திட்டம் தீட்டினார். இதற்காக அவரது தம்பி சிதம்பரத்தை ஏவினார். இசக்கியும் நீலன் குட்டியும் தேவாலயத்திற்கு செல்லும்போது நீலன் குட்டி வேட்டியும் சட்டையும் அணிந்தான். இசக்கி லூயிஸ் பாதிரியாரின் மனைவி தைத்துக் கொடுத்த குப்பாயத்தையும் சேலையும் அணிந்திருந்தாள். இதனை பார்த்து அவர்களை இடைமறித்தான் சிதம்பரம். அவனுடன்

வந்த அடியாள்களில் ஒருவன், "ஓய்... சாணாத்தி ரவிக்கைப் போட்டுட்டுப் போறா ஓய்... என்றான். ஒருவன், அதெப்படி ஓய் ரவிக்கைப் போடலாம்.... ஒரு மட்டு மருவாதி இல்லாமப் போச்சு ஓய்... என்றான். இன்னொருவன் அட, என்ன ஓய் ஆளுக்கு ஆளு பேசிக்கிட்டு நிக்கிறியே... புடிச்சு ரவுக்கைய கிழிச்சுப் போடுலே என்றான் மாடன் ஐயாவின் தம்பி சிதம்பரம்." (முகிலை இராசபாண்டியன், ப.94) அவர்கள் நீலன் மற்றும் இசக்கி ஆகிய இருவரையும் விரட்டினர். ஓட முடியாமல் மண்டியிட்ட நீலன் குட்டியை மரத்தில் கட்டி புளிய மிளாரை வைத்து அடித்தார்கள். இசக்கியைப் பிடித்து வந்து "அவளது உடலை மறைத்திருந்த சேலையைப் பிடித்து இழுத்தான் ஒருவன். பண்ணை வேலை செய்யற பண்ணை நாயி... உனக்கு ரவிக்கை கேக்குதா... என்று அவரது ரவிக்கையை இழுத்துக் கிழித்தான் ஒருவன். கையில் இருந்த வேதாகமத்தால் அவளது மார்பைப் பொத்திக்கொண்டு ஓடினாள் இசக்கி."(முகிலை இராசபாண்டியன், ப.95) அவளையும் பிடித்து வந்து இருவரையும் கொலை செய்து கடற்கரையில் வீசிச் சென்றனர். கொலையை, தற்கொலையாக சித்தரித்தனர். அதைப்போல இரணியல் சந்தையில் பொன்னாயியின் மானத்தைக் காப்பதற்காகச் சென்ற பத்திரகாளி பாட்டியும் மேல் சாதியினரால் கொல்லப்பட்டார்.

**கோவில் விழாக்களில் பெண்களின் உடைகள்**

கோவில் திருவிழாக்களில் கூட பெண்கள் எவ்வாறு உடை அணிய வேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்தது. "நாடார், ஈழவர், புலையர் போன்ற குலங்களில் உள்ள பெண்கள் எப்போதுமே மேலாடை அணியக்கூடாது. நாயர் பெண்கள் நம்பூதிரிகள் முன்பும் மகாராஜா முன்பும் மேலாடை அணியக்கூடாது. நம்பூதிரிப் பெண்கள் இறைவன் முன்பு மேலாடை அணியக்கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு." (முகிலை இராசபாண்டியன், ப. 61) அதுமட்டுமல்லாமல் மார்த்தாண்டவர்ம மகாராஜா சுசீந்திரம் கோயிலுக்கு வரும்போது மன்னரை வரவேற்க ஆசிரமத்தில் இருந்து சுசீந்திரம் வரை பல்லக்கு வரும் பாதையின் இருபுறமும் 200 நாயர் பெண்கள் மேலாடை அணியாமல் கையில் விளக்கேந்தி நிற்க வேண்டும். இவர்கள் தவிர தென்னம் பூவையும் சமூகம் பூவையும் தாங்கியபடி இரண்டு வரிசையில் 20 நம்பூதிரிப் பெண்கள் நிற்க வேண்டும். அடுத்து தீவட்டிக்காரர்கள் நிற்பார்கள் அவர்கள் முழங்காலுக்கு கீழ் ஆடை அணியக்கூடாது இவ்வாறான உடைக்கட்டுப்பாடுகள நாஞ்சில் நாட்டில் காணப்பட்டன.

**முடிவுரை**

ஆசிரியர் முகிலை இராசபாண்டியன் நாஞ்சில் நாட்டு வரலாற்றை தனது புதினங்கள் வழி விளக்குவதில் சிறந்தவர். அதனடிப்படையில் அவரது 'அலைகளின் காலம்' புதினம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்களின் இழிநிலையை அகற்றுவதற்காக நடைபெற்ற தோள் சீலைப் போராட்டங்களை முதன்மைப்படுத்துவதாக அமைந்துள்ளது. இப்புதினம் நம்மை வரலாற்று காலத்திற்கே அழைத்துச் செல்வது போல் அமைந்துள்ளது.

## Reference

[1] இராசபாண்டியன் முகிலை., அலைகளின் காலம், பென்பேடு பப்ளிகேஷன்ஸ்,
மார்ச் 2025.

[2] ஐசக் ஜெயதாஸ்.ஆர், குமரி மாவட்டத்தின் வரலாற்று வைரக்கற்கள்,

மெக்கல்ராய் பப்ளிகேஷன்ஸ், வில்லுக்குறி, கன்னியாகுமரி மாவட்டம். டிசம்பர் 2025.

[3] ஜோஸ்.எச்., கொல்லால், தோள்சீலைப் போராட்டம், திராவிடன் ஸ்டாக் மாடல் நகர், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600021, மார்ச்- 2023.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

KALANJIYAM